நீதித்துறை குற்றவியல் நீதிமன்றம், போளூர் திருவண்ணாமலை மாவட்டம்
(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

**STC 1/2017**

அ. சா. 2

| | | |
|---|---|---|
| பெயர் | :: | திரு. மொழிவேந்தன் |
| தகப்பனார் பெயர் | :: | ஏழுமலை |
| ஊர் | :: | கீழ்வெள்ளம் |
| வட்டம் | :: | வேலூர் |
| ஜாதி | :: | ஆதிதிராவிடர் |
| தொழில் | :: | ஓய்வு பெற்ற உதவி ஆய்வாளர் |
| மதம் | :: | இந்து |
| வயது | :: | 59 |

1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள் 13.02.2019.

முதல் விசாரணை

நான் தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் கடந்த 14.10.2016ம் தேதி தலைமைக்காவலர் மகேந்திரன் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் ஆறுமுகம் ஆகியோருடன் பகல் 1.00 மணியளவில் வீரக்கோயில் உள்ள எதிரி பழனி என்பவரின் வீட்டில் பின்புறம் சோதனை செய்து பார்த்தபோது அங்கு அவர்30 லிட்டர் கொள்ளளவு உள்ள இரண்டு பானைகளில் நாட்டு சாராயம் வைத்திருந்ததை பார்த்து அவற்றை மகஜர் முன்னிலைக்கு கைப்பற்றினோம். மொத்தமாக எதிரியிடமிருந்து 60 லிட்டர் நாட்டு சாராயம் கைப்பற்றப்பட்டது. பின்னர் சோதனைக்காக மாதிரி எடுக்கப்பட்டு சம்பவ இடத்தில் மீதம் இருந்த சாராயத்தை கொட்டி அழித்தோம். பின்பு எதிரியை நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து அவர் மீது மதுவிலக்கு சட்டம் பிரிவு 4(1)(எஎ), 4(1-ஏ) ஆகிய பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். பின்பு எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். மேற்படி நாட்டுச்சாராயத்தை இரசாயன பரிசோதனைக்கு அனுப்பப்பட்டதில் அந்த நாட்டு சாராயம் விஷத்தன்மை அற்றது என்று அறிக்கை வந்தது. அந்த அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும். அந்த அறிக்கையின் பேரில் பிரிவு மாற்றம் செய்து எதிரியின் மீது மதுவிலக்கு சட்டபிரிவு 4(1)(எஎ) படி இறு அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகும்.

குறுக்கு விசாரணை

ரோந்து போன அன்று எத்தனை வழக்கு பதிவு செய்தேன் என்றால் இரண்டு வழக்கு பதிவு செய்தேன். பாதிக்கப்பட்ட யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். புள்ளி விவரத்திற்காக எதிரியின் மீது பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால்
தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி,
சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென ஒப்புக்கொண்டார்.

//ஒப்பம்//

திரு. ஏ.தாமோதரன், பிஎஸ்ஸி.,எம்.பி.ஏ.,எல்எல்எம்.,
நீதித்துறை நடுவர், போளூர்.